DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC .No. | : | 188/2022 |
| Deposition of Witness for | : | P.W. 9 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | முத்தரசன் (HC1387) |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.04.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியுரிந்து வருகிறேன். நான் கடந்த 2016 ம் ஆண்டு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்த போது 05.05.2016 ம் தேதி 8.00 மணிக்கு காவல் நிலையத்தில் கொடுத்த கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு காரைக்குடி கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்று நிலையக்குற்ற எண்.130/2016 இதச பிரிவு 294(பி) , 120(பி), 109, 307 இதச வழக்கின் பி.ஆர் எண்.75/2016 ல் கண்டதை முத்திரையுடன் கூடிய மரப்பெட்டி ஒன்றையும், தபால் ஒன்றையும் பெற்றுக்கொண்டு இராமநாதபுரத்தில் உள்ள தடய அறிவியல் ஆய்வககத்திற்கு 06.05.2016 ல் மேற்படி முத்திரையுடன் கூடிய மரப்பெட்டியும், தபாலையும் ஒப்படைத்தேன். அங்கு ஆர்எம்ஓ/ பயோ/34/2016 நாள் 06.05.2016 பிரகாரம் பெற்றுக்கொண்டு கொடுத்த ரசீதினை கனம் காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது ஆய்வுக்கு அனுப்பப்பட்ட பொருள் குறித்து குறிப்பாக குறிப்பிட்டு வாக்குமூலம் அளித்துள்ளேனா என்றால் விசாரிக்கும் போது உள்ளே இருக்கும் பொருள் குறித்து குறிப்பாக சொல்லவில்லை, மரக்கட்டை என்று சொல்லியுள்ளேன். ஆனால் உறுதியாக அந்த பெட்டிக்குள் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**(3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)**

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC .No. | : | 188/2022 |
| Deposition of Witness for | : | P.W.10 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஆனந்தகுமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.04.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது காரைக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2016 அன்று நான் பணியில் இருந்தபோது மதியம் 1.40 மணியளவில் காரைக்குடி டி.டி நகரைச்சேர்ந்த பழனியப்ப செட்டியார் மகன் இராமநாதன் என்ற 63 வயது ஆண் சிகிச்சைக்காக கணேசன் என்ற நபரால் அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்தபோது அவர் இனம் தெரிந்த ஒரு நபர் 13.03.2016 அன்று மதியம் 1.15 மணியளவில் அரிவாளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. 7 X 7 செ.மீ எலும்பு அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம், தலையின் இடது பக்கத்தில் வெட்டுக்காயம் இருந்தது.

2.7 X 4 செ.மீ எலும்பு அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் வலது முழங்காலில் இருந்தது.

3. 15 X 5 செ.மீ எலும்பு அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் வலுதுபக்க இடுப்பின் பின்புரம் இருந்தது.

4. 15 X 5 செ.மீ சதை அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் இடது தொடையில் இருந்தது.

5. 10X 5 செ.மீ சதை அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் இடது தொடையின் முழங்கால் அருகே இருந்தது.

6. 5X 2 செ.மீ சதை அளவு ஆழம் உள்ள வெட்டுக்காயம் இடது கையில் இருந்தது. அவருக்கு தகுந்த முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். **அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. காயம்பட்ட நபருக்கு நான் சிகிச்சை எதுவும் செய்தேனா என்றால் முதல் உதவி சிகிச்சை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்த போது காயத்தின் தன்மை குறித்து நான் கருத்து எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக குற்ற வழக்கில் மருத்துவ சிகிச்சைக்கு வரும்போது காவல் நிலையத்திர தகவல் தெரிவித்திருந்தால் குறிப்பாணையுடன் வருவது வழக்கம் என்றால் சரிதான், இந்த வழக்கில் குறிப்பாணையுடன் வரவில்லை தகவல் எங்களால் தான் காவல்நிலையத்திற்கு கொடுக்கப்பட்டது.

2. காயம் ஏற்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது இருசக்கர வாகனம் ஒரு நபர் மீது மோதி அதனால் அவருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை.

**(3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.